**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 100/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தனகோபால் | த–பெ /க.பெ. | உடையார் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 63/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பைனான்ஸ் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**24.06.2026**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1) எதிரிகள் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் 02.01.2025 ல் பைனான்ஸ் நிறுவனதில் வைத்து பணம் பெற்றார்கள். பணம் பெற்றிருந்தால் எனது நிறுவனத்தில் வரவு செலவு நோட்டில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரிதான். அந்த மாதத்திற்கான வரவு செலவு நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தேவைப்பட்டால் தர தயாராக உள்ளேன். வரவு செலவு நோட்டை பார்வையிட்டால் எதிரி குறிப்பிட்ட தேதியில் எந்த ஒரு தொகையும் பெறவில்லை என்பதை எதிரி நிரூபிப்பார் என்றால் சரியல்ல. எ.ம.சா,ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள கடன்களை தவிர எதிரி வேறு எந்த கடனும் எங்கள் நிறுவனத்திலிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. தற்போதைய வழக்கு கடன் வேறு கடனுக்கானது. 02.01.2025 ல் எதிரி எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும், எ.ம.சா.ஆ.1 கடனிற்காக எதிரி கொடுத்து வைத்திருந்த காசோலையை எனது முதலாளி என் மூலமாக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி சட்டத்திற்கு உட்பட் கடனை எதுவும் கொடுக்க கடமைபட்டவர் இல்லை

என்றாலும், தற்போதைய வழக்கு சட்டத்திற்கு உட்பட்ட வழக்கு இல்லை என்றாலும் சரியல்ல. 02.01.2025 ல் எதிரிக்கு பணம் கொடுக்காததால்தான் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளை நான் வழக்கில் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.24 14:30:19 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.